# தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய விவகாரம்:

# தீர்வு காணும் பேச்சுவார்த்தை ஒன்றரை மாதமாக நடைபெற்றது

கோலாலம்பூர், மார்ச் 27-

தலைநகர், ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் அமைந்துள்ள தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான பேச்சுவார்த்தை சுமார் ஒன்றரை மாத காலமாக நீடித்து வந்திருந்தது.

புதிய பள்ளிவாசலுக்கு வழிவிட வேண்டிய சூழ்நிலையில் ஆலய விவகாரம் தொட்டு ஆலய நிர்வாகத்தினர் தம்மை அணுகியதாக இலக்கவியல் அமைச்சர் கோபிந்த் சிங் டியோ தெரிவித்தார்.

இதன் தொடர்பில் தாமும், ஆலய நிர்வாகம் மற்றும் பல்வேறு தரப்பினரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வந்துள்ளதாக கூறிய அவர், ஆலய தரப்பினர் தமது உதவியை நாடியதாகவும் உடனடியாக தாங்கள் காரியத்தில் இறங்கியதாகவும் அவர் சொன்னார்.

## கோபிந்த் சிங் கூறுகிறார்



ஆலயத்திற்கு தாம் வருகை புரிந்ததாகவும் கோபிந்த் சிங் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் இரவு ஆலய வளாகத்தில் அவர் நிருபர்களிடம் இந்த விவரங்களை வெளியிட்டார்.

பத்து தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பி. பிரபாகரனும் ஆலய நிர்வாகத்திற்கு உதவிகளை புரிந்து வந்துள்ளார்.

பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் எங்களை பொறுத்த வரையில் இதற்கு தீர்வு காண்பதே எங்களின் நோக்கமாக இருந்தது.

கடந்த வாரம் முழுவதும் பல்வேறு சந்திப்புகளை நாங்கள் நடத்தியிருக்கிறோம். ஆலய நிர்வாகத்திற்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும் இடையே பல பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன என்று அமைச்சர் மேலும் கூறினார்.

சுமார் 130 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்த ஆலயத்திற்கு தற்போதைய இடத்திலிருந்து 50 மீட்டர் தொலைவில்,

இப்போது இருக்கக்கூடிய 4,000 சதுர அடி அளவில் நிலம் வழங்கப்பட்டிருப்பது தொடர்பில் கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டத்தோ ஸ்ரீ டாக்டர் ஸலிஹா முஸ்தபாவிற்கு அவர் நன்றி தெரிவித்தார்.

மாற்று நிலம் வழங்குவது மீதிலான முடிவு திங்கட்கிழமை மாலையில் காணப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

டாக்டர் ஸலிஹா, பிரபாகரன், கோலாலம்பூர் மேயர் டத்தோ ஸ்ரீ மைமுனா முகமட் ஷாரிப் மற்றும் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அனைத்து தரப்பினருக்கும் கோபிந்த் சிங் நன்றி கூறினார்.